## தேசிய விஞ்ஞான மன்றம் - 2013

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் காசுப் பாய்ச்சல் மற்றும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 21(1) பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றல் கூற்று என்பன தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ) மன்றத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 2,867,952 ஆக இருந்ததுடன், இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,988,043 ஆக இருந்தமையால் ரூபா 120,091 வேறுபாடு காணப்பட்டது.

ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரேட்டின் படி திறைசேரி வைப்புக் கணக்கின் மீதி ரூபா 4,032,802 ஆக இருந்ததுடன், திறைசேரி மீதி உறுதிப்படுத்தல்களின் படி அம்மீதி ரூபா 3,298,965 ஆக இருந்தமையால் ரூபா 733,837 ஆன வேறுபாட்டிற்கு காரணம் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பந்தி | அரச சேவையிலிருந்து இளைப்பாறிய நபரொருவர் அரச சேவையில் பதவியொன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இரண்டு மதியுரையாளர்களைச் சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 781,238 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 1645 (அ) | மன்றத்திடம் 07 வாகனங்கள் காணப்பட்டதுடன், இவ்வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய திருத்தச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 09 ஆம் பந்தியின் 2 ஆம் பிரிவு | மன்றத்தின் 125 ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்காக கணக்கிடும் போது சகல கொடுப்பனவுகளுடன் கூடிய சம்பளம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 4,764,926 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,247,108 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 3,482,182 தொகையான அதிகரிப்பொன்று தென்பட்டதுடன், இப்பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தமைக்கு அரசாங்க மானியம் ரூபா 9,409,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தின் தொழிற்படு மூலதன விகிதப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விகிதம் | 2013 | 2012 |
|---|---|---|
| நடைமுறை | 1.05:1 | 2.60:1 |
| விரைவு | 0.94:1 | 2.25:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் மன்றத்தின் குறுங்கால பொறுப்புக்களைத் தீர்க்கும் இயலுமை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. மீளாய்வாண்டின் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பிரதிநிதித்துவம் 32 சதவீதமாக இருந்ததுடன், இருப்புக்களில் 56 சதவீதமானது 05 வருடங்களாக இருந்து வரும் வெளியீடுக்கான இருப்புக்களாக இருந்ததுடன், அவை தீர்வையாவது நிச்சயமற்றதாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மன்றத்தினால் ரூபா 105,445,038 பெறுமதியான 86 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சிகளிலிருந்து 09 ஆராய்ச்சிகளே செயல்ரீதியாக பயன்படுத்தக்கூடியதாக இருந்தன.

(ஆ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சிகளின் இறுதி விளைவுகளாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விஞ்ஞானம் சார்ந்த வெளியீடுகளை வெளியிடுதல், பட்டப்பின் முதுமாணி, கலாநிதி பட்டப்படிப்பிற்காக பயன்படுத்தல் மற்றும் சனாதிபதி விருதுகளுக்காக பரிந்துரைக்கப்படல் தவிர்த்து ரூபா 81,666,303 பெறுமதியான 67 ஆராய்ச்சி மானியங்கள் அறிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்னமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மன்றத்தின் முகாமைத்துவ தகவல் முறைமையை கணனி மயப்படுத்துவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பாடசாலையுடன் 2011 பெப்ரவரி 15 ஆம் திகதி ரூபா 2,999,000 தொகை பெறுமதியான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அச்செயற்பாடு 2012 யூன் 14 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் 2014 யூன் 10 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,157,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மன்றத்தால் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான தரவுகள் தொகுதியாக்கப்படாமல் இருந்ததுடன், பரிசோதிக்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

i. நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லை ஓராண்டை விடவும் மிகைத்திருந்த ரூபா 3,461,802 தொகைக்குரிய 4 ஆராய்ச்சிகளுக்காக இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய காலம் மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

ii. பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 10,810,722 ஆன 9 ஆராய்ச்சிகளுக்குரிய அறிக்கை மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லையை மிகைத்து 02 மாதங்கள் முதல் 09 மாதங்கள் காலம் செலவிடப்பட்டிருந்தன.

iii. ரூபா 7,107,584 பெறுமதியான 06 ஆராய்ச்சி மானியங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய காலம் முடிவடைந்திருந்த போதிலும் 2014 சனவரி மாதம் வரையில் குறித்த ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள்

தனியார் கம்பனியொன்றினால் 2013 திசெம்பர் 25 ஆம் திகதி வரையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 7,284,200 கிரயத்திலான கன்டேனர் அலுவலகக் கட்டிடம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளவாறானவை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுத்தரம் | 63 | 50 | 13 |
| நிறைவேற்றுத்தரமல்லாத | 81 | 76 | 05 |
| | 144 | 126 | 18 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 மார்ச் மாதத்திலிருந்து 2013 திசெம்பர் 17 வரை நிர்வாக மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவரால் தயாரிக்கப்பட்டிருந்த அலுவலக ஒழுங்குவிதிக் கோவை (MOP) பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2012 மே 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த அறிக்கை நடவடிக்கைகள், சஞ்சிகை வெளியீட்டிற்கான நடவடிக்கைககள் மற்றும் பிரதேச மட்டத்திலான விஞ்ஞான தின நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய பிரிவுத் தலைவர்கள மற்றும் பதவியணியினர் இருக்கும் போதும் அச்செயற்பாடுகளுக்காக இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவர் 2011 யூலை 27 ஆம் திகதி மதியுரையாளராக சேர்க்கப்பட்டிருந்தார். இவ் உத்தியோகத்தருக்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 1,012,190 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி மானியம்
(ஆ) வெளியீடுகளின் இருப்புக்கள்
(இ) நிலையான சொத்துகள்
(ஈ) கணக்கீடு
(உ) சொத்துப் பயன்பாடு